வேளாண்மை உழவர் நலத் துறை அமைச்சர் எம். ஆர். கே. பன்னீர்செல்வம் நேற்று (31.12.2024) சென்னை, தேனாம்பேட்டை, கதீட்ரல் சாலையில் உள்ள செம்மொழிப் பூங்காவில் வருகின்ற ஜனவரி 2ஆம் தேதி முதல் நடைபெறவுள்ள மலர் கண்காட்சிக்கான முன்னேற்பாடு பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். ஆய்வின்போது சட்டமன்ற உறுப்பினர் மரு.நா.எழிலன், வேளாண்மைத் துறை இயக்குநர் பி.முருகேஷ், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் பி.குமரவேல் பாண்டியன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

தமிழ்நாடு அரசு எடுத்த பல்வேறு நடவடிக்கையால்

ஆவின் பால் விற்பனை நாளொன்றுக்கு 30 இலட்சம் லிட்டர் விற்பனை!

அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன் தகவல்!

சென்னை, ஜன.01

தமிழ்நாடு அரசு எடுத்த பல்வேறு நடவடிக்கையால் ஆவின் பால் விற்பனை 2024-25-ல் சுமார் 7 இலட்சம் லிட்டருக்கு மேல் அதிகரித்து தற்போது நாளொன்றுக்கு 30 இலட்சம் லிட்டர் விற்பனையாகிறது என்று பால்வளத் துறை அமைச்சர் ஆர்.எஸ். இராஜ கண்ணப்பன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவ்வறிக்கை வருமாறு:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான ஆட்சியில் ஆவின் நிறுவனத்தின் சாதனையாக 7 இலட்சம் லிட்டர் பால் விற்பனை அதிகரித்துள்ளது.

தமிழ்நாடு முழுவதும் அமைந்துள்ள 27 ஒன்றியங்கள் மற்றும் சென்னை மெட்ரோ மூலமாக சுகாதாரமான முறையில் தரம்

ஒன்றே குறிக்கோளாகக் கொண்டு பால் மற்றும் பால் உபப்பொருட்களை தயாரித்து நுகர்வோர்களுக்கு நியாயமான விலையில் ஆவின் நிறுவனம் விற்பனை செய்து வருகிறது.

தமிழ்நாடு முழுவதும் கடந்த 2019-2020ஆம் ஆண்டில் சுமார் 23 இலட்சம் லிட்டராக இருந்த ஆவின் பால்விற்பனையை, அரசு எடுத்த பல்வேறு நடவடிக்கையின் காரணமாக 2024-2025-ல் சுமார் 7 இலட்சம் லிட்டருக்கு மேல் அதிகரித்து தற்போது நாளொன்றுக்கு 30 இலட்சம் லிட்டர் விற்பனை செய்து வருகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் செயல்படும் தமிழ்நாடு அரசு, பால் உற்பத்தியாளர்களின் கோரிக்கையினை கனிவுடன் பரிசீலனை செய்து, 18.12.2023 முதல் ஆவின் கூட்டுறவு சங்கத்திற்கு பால் வழங்கும் பால் உற்பத்தியாளர்களுக்கு, லிட்டர் ஒன்றுக்கு ரூ.3 உற்பத்தி ஊக்கத்தொகையாக பிரதம சங்கங்களின் மூலம் நிலுவையின்றி உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. பால் உற்பத்தியாளர்களின் கோரிக்கையின்படி நலச் சங்கத்தின் கோரிக்கையின் படியும், மாவட்ட ஒன்றியத்தில் இருந்து பால் உற்பத்தியாளர்களின் வங்கிக் கணக்கிற்கு நேரடியாக அரசு அறிவித்த ரூ.3 ஊக்கத்தொகை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

முதற்கட்டமாக நாமக்கல் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் மூலம் இந்த பணி ஜனவரி 2025 முதல் வாரத்தில் செயல்படுத்தப்பட உள்ளது. அதனைத் தொடர்ந்து பிற மாவட்டங்களிலும் மேற்கண்ட நடைமுறை அமுல்படுத்தும் விதமாக அரசு அறிவித்த லிட்டர் ஒன்றுக்கு ரூ.3 ஊக்கத்தொகை மாவட்ட ஒன்றியத்தில் இருந்து பால் வழங்கிய சங்க உறுப்பினர்களின் வங்கி கணக்கிற்கு நேரடியாக செலுத்தப்பட உள்ளது என்பதை தெரிவித்துக்கொள்கிறோம்.

இவ்வாறு அமைச்சர் ஆர்.எஸ்.ராஜ கண்ணப்பன் தெரிவித்தார்.

நேற்று (31.12.2024) ஆந்திர மாநிலம், திருப்பதி நகரம், காந்தி சாலையில் நவீனமயமாக்கப்பட்ட புதிய கோஆப்டெக்ஸ் பாலாஜி விற்பனை நிலையத்தினை தமிழ்நாடு அரசின் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி திறந்து வைத்து, முதல் விற்பனையை தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் திருப்பதி சட்டமன்ற உறுப்பினர் ஆரணி சீனிவாசலு, கோஆப்டெக்ஸ் மேலாண்மை இயக்குநர் தீபக் ஜேக்கப் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

பெரம்பலூர் மாவட்ட மாணவரணி சார்பில், இலவச மருத்துவ முகாம்!

துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா எம்.பி. துவக்கி வைத்தார்!

பெரம்பலூர், ஜன. 1 -

பெரம்பலூர் மாவட்ட மாணவரணி சார்பில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு நடைபெற்ற மாபெரும் இலவச மருத்துவ முகாம், பாலக்கரையில் உள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில் நடைபெற்றது.

கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா. எம்.பி., கலந்து கொண்டு, இலவச மருத்துவ முகாமை துவக்கி வைத்தார். இந்த இலவச மருத்துவ முகாமில் பொது மருத்துவம், கண் சிகிச்சை, அக்குபஞ்சர் சிகிச்சை, உள்ளங்கால் சிகிச்சை ஆகியவற்றிற்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.

இதில் 200க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு பயனடைந்தனர். 45 பேருக்கு கண் கண்ணாடிகள் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில், மாவட்டக் கழக செயலாளர் வீ.ஜெகதீசன், சட்ட மன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் குன்னம் சி.இராஜேந்திரன், தலைமை செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என்.ராஜேந்திரன், பொதுக்குழு உறுப்பினர்கள் எஸ்.அண்ணாதுரை, பட்டுச்செல்விராஜேந்திரன், அழகு. நீலமேகம், ஆர்.முருகேசன், மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் தழுதாழை பாஸ்கர், சன். சம்பத்,

நூருல்ஹிதா இஸ்மாயில், ஒன்றிய கழகச் செயலாளர்கள் என். கிருஷ்ணமூர்த்தி, எம்.ராஜ் குமார், எஸ்.நல்லதம்பி, தி.மதியழகன், சி.ராஜேந்திரன், டாக்டர் செ.வல்லபன், ந.ஜெகதீஷ்வரன், ஒன்றிய பெருந்தலைவர்கள் க.ராமலிங்கம், பிரபா செல்லப்பிள்ளை,

மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் து.ஆதவன்(எ)ஹரிபாஸ்கர், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் வ.சுப்ரமணியன், அ.அப்துல்கரீம் மா.பிரபாகரன், டி.ஆர்.சிவசங்கர், ஆர்.அருண், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் மகாதேவி ஜெயபால்,

பூலாம்பாடி பேரூர் கழகச் செயலாளர் செல்வலட்சுமி சேகர், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் தங்க.கமல், மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர்கள் பா.ரினோ பாஸ்டின், தமிழ்வேந்தன்,

மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர் அணி அமைப்பாளர் எம்.மணிவாசகம் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

சென்னை தென் மேற்கு மாவட்டம் பகுதிச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ அறிவிப்பு!

சென்னை தென்மேற்கு மாவட்ட பகுதிச்செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம் இன்று (01.01.2025) புதன்கிழமை காலை 11.00 மணியளவில் சி.பி.ராமசாமி சாலையில் உள்ள அலுவலகத்தில் மாவட்ட அவைத்தலைவர் அ.சந்திரசேகர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில், மாவட்ட நிர்வாகிகள், பகுதிச் செயலாளர்கள், தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: தை திருநாள் தமிழ்புத்தாண்டு பொங்கல் நிகழ்ச்சிகள் மற்றும் கழக ஆக்க பணிகள் குறித்து.

மயிலை த.வேலு எம்.எல்.ஏ.

செயலாளர், சென்னை தென்மேற்கு மாவட்ட தி.மு.க.

3 நாட்கள் நடைபெறுகிறது! - தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம்மூலம்

தொழிற்சாலைக்கு உதவும் இரசாயனப் பொருட்கள் - வீட்டு பராமரிப்புப் பொருட்கள் தயாரித்தல் தொடர்பான பயிற்சி!

சென்னை, ஜன. 1 -

தமிழக அரசின் தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், சென்னையில், தொழிற் சாலைக்கு உதவும் இரசாயனப் பொருட்கள் மற்றும் வீட்டு பராமரிப்பு பொருட்கள் தயாரித்தல் தொடர்பான பயிற்சி வரும் 08.01.2025 முதல் 10.01.2025 தேதி வரை காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை நடைபெற உள்ளது.

இப்பயிற்சியில் பிளாக் ஃபீனைல், கட்டிங் ஆயில், கிரீஸ், தொழில்துறை சோப்பு எண்ணெய், பைப் கிளீனிங் பவுடர், வாட்டர் டேங்க் கிளீனிங் லிக்விட், டிஷ்வாஷ் சோப், டிடர்ஜென்ட் சோப், டெட்டால், எஸ்எஸ் மெட்டல் கிளீனிங் லிக்விட், கார் பாலிஷ் மற்றும் இன்டஸ்ட்ரியல் ஃப்ளோர் க்ளீனிங், ஃப்ளோர் கிளீனர், டிஷ் வாஷ் திரவம், சோப்பு திரவம், ஃபேப்ரிக் சாஃப்ட்னர் & கண்டிஷனர், கை கழுவும் திரவம் மற்றும் பயிற்சி வழிமுறைகளுடன் சுயமாக தொழில் தொடங்குவதற்கு இந்த பயிற்சி மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

இப்பயிற்சியில் ஆர்வமுள்ளவர்கள் (ஆண்/பெண்) 18 வயதுக்கு மேற்பட்ட குறைந்தபட்ச கல்வித் தகுதி 10ம் வகுப்பு தேர்ச்சியாளர்கள் விண்ணப்பிக்கலாம். பங்குபெறும் ஆண், பெண் பயனாளிகளுக்கு குறைந்த வாடகையில் குளிரூட்டப்பட்ட தங்கும் விடுதி உள்ளது தேவைப்படுவோர் இதற்கு விண்ணப்பித்து பெற்றுக் கொள்ளலாம்.

இப்பயிற்சி பற்றிய கூடுதல் விவரங்களை பெற விரும்புவோர் www.editn.in என்ற வலைத்தளத்தில் தெரிந்து கொள்ளலாம்.

மேலும் விவரங்களுக்கு அலுவலக வேலை நாட்களில் (திங்கள் முதல் வெள்ளி வரை) காலை 10 மணி முதல் மாலை 5.45 மணி வரை தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி மற்றும் தொலைபேசி / கைபேசி எண்கள்.

தமிழ்நாடு தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், சிட்கோ தொழிற்பேட்டை, இடிஐஐ அலுவலகச் சாலை ஈக்காட்டுத்தாங்கல், சென்னை - 600 032.

கைபேசி எண்கள் 8668102600 / 7010143022

முன்பதிவு அவசியம்:

அரசு சான்றிதழ் வழங்கப்படும்

மதுரவாயல் சட்டமன்ற தொகுதி,பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்11, வார்டு151ல் (30.12.2024) அன்று பூத்தபேடில் அமைந்துள்ள மாநகராட்சி நடுநிலைப் பள்ளியில் போரூர் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி மாணவிகள் பங்கு பெற்ற நாட்டு நலப்பணித் திட்டத்தின் (NSS) நிறைவு நாளில் சென்னை தெற்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளரும், பெருநகர சென்னை மாநகராட்சி,151வது வார்டு மாமன்ற உறுப்பினருமான ச. சங்கர் கணேஷ் கலந்து கொண்டு மாணவிகளுக்கு பாராட்டுகள் தெரிவித்து சான்றிதழ்களை வழங்கினார். இந்நிகழ்வில் போரூர் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியின் தலைமை ஆசிரியை,ஆசிரிய பெருமக்கள், கழகத்தினர் உடனிருந்தனர்.

ஜனவரி 2 ஆம் தேதி முதல்

சென்னை மின்சார ரயில்களின் அட்டவணை மாற்றம்!

தெற்கு ரயில்வே அறிவிப்பு!

சென்னை, ஜன. 1-

ஜனவரி 1, 2025 புதிய ரயில் அட்டவணை அமலுக்கு வருகிறது. இந்திய ரயில்வே அறிமுகம் செய்துள்ள புதிய ரயில் அட்டவணையில் ரயில் வழித்தட வரைபடம், ரயில் நிலையம் மற்றும் ரயில்களின் எண்கள், ரயில்களின் பெயர், பயண நேரம் உள்ளிட்டவை இடம்பெற்றுள்ளன. மேலும் ரயில் டிக்கெட் முன்பதிவு தொடர்பாக விவரங்கள், தட்கல், டிக்கெட் கட்டணம் திரும்ப பெறும் முறைகள், ரயில் பயண சலுகைகள், சிறப்பு பயண திட்டங்கள் ஆகியவையும் இருக்கின்றன. இந்நிலையில் சென்னையில் அனைத்து மின்சார ரயில்களின் அட்டவணை ஜனவரி 2ம் தேதி முதல் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. கடற்கரை - செங்கல்பட்டு, கும்மிடிப்பூண்டி உள்ளிட அனைத்து வழித்தட மின்சார ரயில்களின் நேரம் மாற்றம் செய்யப் பட்டுள்ளது.

இதுதொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், "01.01.2025 முதல் அமுலுக்கு வரும் வகையில் மெயில்/எக்ஸ்பிரஸ் ரயில் நேர மாற்றங்களைக் கருத்தில் கொண்டு பயணிகளின் தேவை மற்றும் செயல்பாட்டுக் காரணங்களைக் கருத்தில் கொண்டு, அனைத்துப் பிரிவுகளுக்கும் புறநகர் ரயில் நேரங்கள் திருத்தப் பட்டுள்ளன. திருத்தப் பட்ட புறநகர் கால அட்டவணை 02 ஜனவரி 2025, (வியாழன்) முதல் நடைமுறைக்கு வரும் மற்றும் வார நாள் ரயில் சேவைகளுக்கு மட்டுமே இது பொருந்தும்" என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஜனவரி 2-ம் தேதி முதல் மாற்றம் செய்யப்பட்டுள்ள ரயில்களின் அட்டவணை முழு விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழாவையொட்டி – திருவொற்றியூர் மேற்குப் பகுதிக் கழகத்தைச் சேர்ந்த கழக செயல் வீரர் டாக்டர் எஸ்.அப்பு (எ) சிவராமன் ஏற்பாட்டில் மாவட்ட அளவில் 30 அணிகள் பங்கேற்ற மாபெரும் கிரிக்கெட் போட்டி நடைபெற்றது. இதில் தலைமைக் கழகப் பேச்சாளர் வாசு கருணாநிதி பங்கேற்றார். வழக்கறிஞர் அஜய் போட்டிகளை முன்னின்று நடத்தினார். இதில் முதல் பரிசுக்கு ரூ. 30 ஆயிரத்தை அப்பு கிரிக்கெட் கிளப்பும், இரண்டாம் பரிசு – 20 ஆயிரத்தை எலக்ட்ஸ் ஸ்டைக் சர்சும், மூன்றாம் பரிசு ரூ. 10 ஆயிரத்தை ஆனந்தன் பிளாஸ்டர் ஜசும் வென்றன். பரிசுகளை நிகழ்ச்சி ஏற்பாட்டாளர் டாக்டர் எஸ்.அப்பு (எ) சிவராமன் வழங்கினார்.

தாம்பரம் மாநகராட்சி மண்டலம்–1 மாமன்ற கூட்டம் மண்டலம் 1 குழுத் தலைவர்,பம்மல் தெற்கு பகுதி கழக செயலாளர் வே.கருணாநிதி தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் உதவி ஆணையாளர் சொர்ணலதா,மாநகராட்சி உதவி செயற்பொறியாளர் சத்தியசீலன், மாமன்ற உறுப்பினர்கள் இரா. நரேஷ்கண்ணா, ஆ.மதினாபேகம், ஜெ.சண்முகசுந்தரி, கலைவாணி பிரபு, வாணிஸ்ரீ விஜயகுமார், சித்ரா தமிழ்குமரன், கல்யாணி டில்லி, மு.இன்பசேகர், ரம்யா சத்தியபிரபு, சத்யா மதியழகன், சித்ராதேவி முரளிதரன்,மண்டல கண்காணிப்பாளர்,பொதுப்பணி மேற்பார்வையாளர்கள்,சுகாதார அலுவலர் மற்றும் மண்டல பணியாளர்கள் கலந்துகொண்டனர்.

திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி தொகுதிக்குட்பட்ட திருத்தணி முருகப்பா நகர் பகுதியில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழகச் செயலாளரும் திருத்தணி சட்டமன்ற உறுப்பினருமான திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ அப்பள்ளியில் திடீர் ஆய்வு மேற்கொண்டு அப் பள்ளியில் ஆசிரியர்கள் மாணவ மாணவியர்கள் இப்பள்ளிக்கு கூடுதல் வகுப்பறை வேண்டும் என்று கோரிக்கை வைத்த நிலையில் திருத்தணி சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து கூடுதல் பள்ளி வகுப்பு கட்டிடத்தை கட்டி தருவதாக உறுதி அளித்தார் உடன் திருத்தணி நகரக் கழகச் செயலாளர் திருத்தணி வி.வினோத்குமார், நகர் மன்ற உறுப்பினர்கள் ஜி.எஸ்.கணேசன், அசோக்குமார், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ம.கிரண், வார்டு செயலாளர் ரவி மற்றும் அன்பு உட்பட ஆசிரியர்கள் உள்ளனர்